**பத்திரிக்கைச் செய்தி**

**செ.வெ.எண்: 9/ஆகஸ்ட்/2011** **நாள்: 3.8.2011**

இந்திய விமானப் படையில் சேர திருமணமாகாத இளைஞர்களுக்கு
ஓர் அறிய வாய்ப்பு.

---

1.1.1991 முதல் 28.2.1995-ம் தேதிக்குள் தமிழகம் மற்றும் புதுவை மாநிலத்தில் பிறந்த திருமணமாகாத இளைஞர்களிடமிருந்து நவம்பர் 2011-ல் நடைபெற உள்ள குரூப் X (Technical Trades) டெக்னிக்கல் ட்ரேட்களில் படைவீரர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த தேர்வில் கலந்து கொள்பவர்கள் 10th , +2 அல்லது இண்டர்மீடியட் படிப்பில்(கணிதம் மற்றும் இயற்பியல் பாடங்களுடன்) குறைந்த பட்சம் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேர்வாகியிருக்க வேண்டும். அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற பாலிடெக்னிக் நிறுவனத்தில் ஏதாவது ஒரு பொறியியல் பிரிவில் 3 வருட டிப்ளமோ படிப்பில் குறைந்த பட்சம் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்று தேர்வாகியிருக்க வேண்டும். இந்த தேர்வுகள் பற்றிய விரிவான தகவல் மற்றும் விண்ணப்பத்திற்கு 16-22 ஜீலை 2011 தேதியிட்ட எம்ப்ளாய்மெண்ட் நாளிதழ் மூலம் விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய முகவரி "சென்ட்ரல் ஏர்மென் செலக்ஷன் போர்டு, போஸ்ட்பாக்ஸ் நம்பர் 11807, புதுடெல்லி- 110010. விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 9.8.2011 ஆகும். விண்ணப்பங்கள் சாதாரண தபாலில் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும், விவரங்களை www.indianairforce.nic.in என்ற இணையதளத்திலும் , 044-22796565 என்ற தொலைபேசி எண்ணிலும் தெரிந்து கொள்ளலாம்.

இந்த அரிய வாய்ப்பினை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தகுதியுடைய நபர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ப.மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**